1972 மார்ச் 11]

அரிசனங்களுக்கு குடியிருப்புகள்

* 436 வினா—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971-72-ல் மாயூரம் தொகுதி காளி பஞ்சாயத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை பேருக்கு அரசு வீடுகள் கட்டித் தந்துள்ளது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஒருவருக்கும் இல்லை.

* 437 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஒன்றியத்திலுள்ள மாப்படுகைப் பஞ்சாயத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 1971-72-ம் ஆண்டில் அரசு கட்டித்தரவிருக்கும் வீடுகள் எத்தனை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : 10 வீடுகள்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த இரு கேள்விகள் அடங்கிய மாயூரம் தொகுதி காளி, மாப்படுகை ஆகிய இரு பஞ்சாயத்துக்களிலும் மாவட்ட அரிசன நலத் துறை மூலமாக வீடுகள் கட்ட வேண்டுமென்று ஆரம்பித்து அதற்காக முன்பணமும் கோரி செலுத்தப்பட்டுள்ளது. இன்னும் அங்கே வீடுகள் கட்ட எந்த விதமான பணியும் துவங்கப்படவில்லை. அதைச் செயல்படுத்துவதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் சிபாரிசு செய்த காளி என்ற கிராமத்தில் தற்போது 940 ரூபாயில் நல இலாகா கட்டித் தரும் வீடுகளுக்குச் சற்று அதிகமாகப் பணம் கொடுத்து 1,150 ரூபாயில் கட்டித் தரவேண்டுமென்று கேட்டார்கள். 1,150 ரூபாயில் வீடு கட்டித் தர நலத்துறை இயக்குநர் ஒப்புக்கொண்டு எஞ்சிய பணத்தை வீடு ஒன்றுக்கு 210 ரூபாய் வீதம் அந்தக் கிராமத்தில் இருப்பவர்கள்

தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதை அந்தக் கிராமத்திலுள்ள அரிசன மக்களும் ஒத்துக் கொண்டார்கள். ஆனல் அவர்கள் பத்து வீடுகளுக்கு கட்டவேண்டிய முழுத் தொகை 2,100-ஐயும் கட்டாமல் வெறும் ஆயிரம் ரூபாய் மாத்திரமே கட்டினர்கள். அதனல் அந்தக் கிராமத்தில் வீடுகள் கட்டவில்லை. அதே போன்று மாப்படுகையிலும் 2,100 ரூபாய் கட்ட வேண்டியிருக்க 1,050 ரூபாய்தான் கட்டினர்கள். இந்த ஆண்டு நிதி நிலைக்கேற்ப நலத்துறை மூலம் செலவழிக்கப்பட வேண்டிய தொகை ஒதுக்கப்பட்டு விட்ட காரணத்தால் அதே மாவட்டத்தில் வேறு பல இடங்களில் யார் முழுத் தொகையும் கட்டியிருக்கிருர்களோ அங்கு கட்ட முடிவு செய்து அறந்தாங்கி தாலுகாவிலுள்ள ஒரு கிராமத்திலும், ஒரத்தநாடு தாலுகாவிலுள்ள கள்ளிகுடி கிராமத்திலும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகிறது. இந்த ஆண்டு உறுப்பினர் குறிப்பிட்ட இரண்டு கிராமங்களிலும் ஒப்புக் கொண்ட தொகையைக் கொடுத்துவிட்டால் வீடு கட்டிக் கொடுக்க வழி ஏற்படும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இத்தகைய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் பணியைக் குடிசை மாற்று வாரியத்திடம் ஒப்படைத்து நல்ல சுகாதார வசதியோடு திட்டமிட்டு குடியிருப்புகளைக் கட்டித் தர அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பண வசதி இல்லாத ஏழை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நலத் துறை மூலமாக இப்போதே வீடு கட்டிக் கொடுப்பது இன்றைக்கும் அரசாங்கக் கொள்கையாக இருக்கிறது. கடனைக் கொடுத்து கடனைத் திருப்பிக் கொடுக்கத்தக்க நிலையிலுள்ள அரிசன மக்களுக்கு எல்.ஐ.சி. மூலமாக பண உதவி பெற்று நலத் துறை மூலமாக சொசைடி அமைத்து வீடு கட்டிக் கொடுப்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம் : தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த சில அரசாங்கச் சிப்பந்திகள் தனியாக வீடு கட்டிக் கொள்ள என்று கடன்களை எழுப்புகின்ற நேரத்தில் நம்முடைய அரிசன நல இலாகா அவர்களுக்கு உதவி செய்வதற்கு முன் வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கிற திட்டத்தின் கீழ் எல்.ஐ.சி. மூலமாக நிதி உதவி பெறுவது பற்றிப் பரிசீலனை முடிந்து முடிவு எடுக்கப்பட்ட பிறகு இவை எல்லாம் நிச்சயமாக கவனிக்கப்படும்.

மேட்டூரிலுள்ள அலுமினியம் கம்பெனிக்குச் சொந்தமான நிலம்.

* 438. வினா—**திரு. எம் சுரேந்திரன் :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மேட்டூரில் உள்ள மதராஸ் அலுமினியம் தொழிற்சாலைக்கு, நில உச்சவரம்பு சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அவ்வாறு அனுமதிக்கப்பட்டிருக்கும் நில விஸ்திரணம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) : தி மதராஸ், அலுமினியம் கம்பெனி, மேட்டூர் வட்டத்தில் தனக்குச் சொந்தமான 659.06 ஏக்கர் நிலம் குறித்து தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் (சட்டம் எண். 58/1961) 73 (iv) பிரிவின்கீழ் விலக்கு அளிக்க வேண்டுமென்று 15-7-71 அன்று அரசுக்கு விண்ணப்பித்துள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : மேட்டூரில் இருக்கக்கூடிய அலுமினியம் தொழிற்சாலையின் பேரில் இருக்கக்கூடிய, ஒதுக்கப்பட்ட நிலத்தின் விஸ்தீரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அவர்களுக்கு மொத்தமாக இருக்கும் நிலம், அடமானம் செய்த நிலம் ஹோல்டிங்க்ஸ் என்ற முறையில் 390 ஏக்கர் 82 சென்ட் ஆகும். இது தவிர புறம்போக்கு நிலத்தையும் அவர்கள் ஆக்கிரமித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் அது பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : What is the extent of land which is exactly required for the Aluminium Factory? Has the Government gone into the question?